DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -33

| | | |
|---|---|---|
| Name | : Dr.மதியழகன் | Caste: |
| Father's Name: | திரு. கலியபெருமாள் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 29th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8, A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**29.01.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் முதுமை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.05.2008 அன்று அதே மருத்துவமனையில் அரசு உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். அன்றைய தினம் மாலை 4.20 மணிக்கு நான் மேற்படி மருத்துவமனையில் அலுவலலில் இருந்தபோது மீன்சுருட்டி காவல்நிலைய ஆய்வாளரிடமிருந்து கு.எண்.130/2008 இ.த.ச.பிரிவுகள் 147, 148, 341, 326, 324, 302, 307 மற்றும் 120(பி) படியான வழக்கில் சம்மந்தப்பட்ட காசிநாதன், த.பெ.நாகபிள்ளை என்ற சுமார் 60 வயது நிரம்பிய ஆண் பிரேதத்தின்மீது சடலக்கூராய்வு செய்து அறிக்கை வழங்கக்கோரி வேண்டுகோள் கடிதமானது மேற்படி காவல்நிலைய த.கா.628 திரு. கோவிந்தராஜ் என்பவர் மூலமாக பெறப்பட்டது.

பிரேதத்தை மேற்படி த.கா.கோவிந்தராஜன் என்பவர் என்னிடம் ஒப்படைத்து அடையாளம் காண்பித்தார். அந்த விண்ணப்பத்திற்கிணங்க அன்றையதினமே பிற்பகல் 4.30 மணிக்கு சடலக்கூராய்வை ஆரம்பித்தேன்.

பிணவிரைப்பு தன்மையானது பிரேத்தின் இரண்டு கால்களிலும், இரண்டு கைகளிலும் காணப்பட்டது. அந்த பிரேதம் சுமாராக போசிக்கப்பட்ட ஆண் பிரேதம். பிரேதம் மல்லாந்த நிலையில், கைகள் பக்கவாட்டிலும், கண்கள் மூடிய நிலையிலும், வாய் மூடிய நிலையில் காணப்பட்டது.

பிரேதத்தில் கீழ்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டன.

1. கழுத்தின் இடது பக்கத்தின் மேல்பகுதியில் 12x3 cmx எலும்பு வரை ஆழம் கொண்ட வெட்டு காயம் காணப்பட்டது. அந்த காயத்தில் இடது காதின் மடலானது வெட்டுபட்ட நிலையில் காணப்பட்டது.

2. வலது பக்க கழுத்தில் நடுப்பகுதியில் 15x3 cmx எலும்பு வரை ஆழம் கொண்ட வெட்டு காயம் காணப்பட்டது.

3. இரண்டாவது காயத்தின் மேற்பகுதியில் 10x2 cmx எலும்பு வரை ஆழம் கொண்ட வெட்டு காயம் காணப்பட்டது. அந்த காயத்தின் மூலம் கபாலஎலும்பின் பின்பகுதியில் எலும்பு உடைந்த நிலையில் இருந்தது தெரியவந்தது.

4 .கழுத்தின் பின்பகுதியில் 4x1 cmx எலும்பு வரை ஆழம் கொண்ட வெட்டு காயம் காணப்பட்டது.

5. வலது பக்க முதுகின் பின்புறம் சப்பை எலும்பு பகுதியில் 5x2 cmx எலும்பு வரை ஆழம் கொண்ட வெட்டு காயம் காணப்பட்டது.

6. இடது பக்க மார்பு பகுதியில் 3x2 cmx எலும்பு பகுதியை கடந்து ஆழம்கொண்ட கத்தி குத்து காயம் காணப்பட்டது.

7. வலது பக்க வயிற்று பகுதியில் 5x3 cmx சதைபகுதியை கடந்து ஆழம் கொண்ட கத்தி குத்து காயம் காணப்பட்டது. அந்த காயத்தின் வழியாக குடல் வெளியே வந்திருந்தது.

**<u>உட்புறகூராய்வு</u>**

**<u>மார்பு பகுதி –</u>** விலா எலும்புகளில் முறிவு எதுவும் காணப்படவில்லை. இடது நுரையீரலின் கீழ் பகுதியில் 3x2x2 cm அளவுள்ள கிழிந்த காயம் காணப்பட்டது. இருதயத்தின் அனைத்து அறைகளும் காலியாக காணப்பட்டது.

**வயிற்று பகுதி–** இரைப்பையில் சுமார் 150 கிராம் செரித்த உணவு பொருள் இருந்தது. குறிப்பிடதகுந்த எந்த வாடையும் இல்லை. மண்ணீரல், கல்லீரல் மற்றும் சிறுநீரகங்கள் ஆகியவை ரத்தம் செரிந்து காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது.

**கபாலம்–** கபாலத்தின் பின்புற எலும்பு உடைந்து காணப்பட்டது. சுமார் 5x3x3 cm அளவில் கிழிந்த காயமானது மூளையின் பின்புறம் காணப்பட்டது. சுமார் 50 கிராம் அளவுள்ள உறைந்த ரத்தமானது மூளையின் பின்புற பகுதியில் காணப்பட்டது.

அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு பிண கூராய்வு நிறைவு செய்யப்பட்டது. மேற்படி நபர் பிணகூராய்வு செய்யப்படுவதற்கு 8 முதல் 12 மணி நேரங்களுக்கு முன்பாக இறந்திருக்க கூடும்.

இறந்த நபர் அவருக்கு உடலின் முக்கிய உறுப்புகளான மூளை மற்றும் நுரையீரல் ஆகியவற்றில் ஏற்பட்ட காயங்களினால் உண்டான ரத்தபோக்கு மற்றும் அதிர்ச்சியினால் இறந்திருக்கலாம் என்று கருத்து தெரிவித்து நான் பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். என்னால் வழங்கப்பட்ட பிரேதபரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.35.

என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பட்டாகத்திகள் மற்றும் வீச்சருவாள் போன்றவற்றால் ஒரு நபர் தாக்கப்படும்போது நான் மேலே சொன்ன வெளிப்புற காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை குறிப்பாக எந்த தேதியன்று விசாரித்தார்கள் என்று என்னால் குறிப்பாக சொல்லமுடியாது என்றால் சரிதான். எத்தனை முறை விசாரித்தார்கள் என்றும் என்னால் குறிப்பாக சொல்லமுடியாது என்றால் சரிதான். எத்தனை

ஆய்வாளர்கள் என்னை விசாரித்தார்கள் என்று என்னால் குறிப்பாக சொல்லமுடியாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தபோது கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்படும்போது மேற்கண்ட வெளிப்புற காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆயுதங்களால் தாக்கப்படும்போது மேற்படி காயங்கள் ஏற்படும் என்று சொல்லவில்லை.

கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்படும்போது மேற்படி வெளிப்புற காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு என்று நான் பிரேதபரிசோதனை அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகள் நீங்கலாக வேறு எந்த சங்கதியையும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.